அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம், லோறன்ஸ்கூக்
ANNAI POOPATHI TAMILSK KULTURSENTER, LØRENSKOG
ANNAI POOPATHI TAMIL CULTURAL CENTER, LØRENSKOG

# பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை இல. 19 - 2023*

## கல்வி - 13.05.2023 சனிக்கிழமை - 09:30 -12:30 (10:45-11:15)

*அனைத்துலக ஆண்டிறுதித் தேர்வு 2023*

கடந்தவாரம் - புலன்மொழித்தேர்வுகள் (கேட்டல் மற்றும் பேசுதல்) மிகச்சிறப்பாக நடைபெற்றது. இத்தேர்வுகளை தகுந்த காரணத்துடன் (முன் கூட்டிய தகவல் வழங்கி) எடுக்கத் தவறியவர்கள் 11.05.2023, 22:00 இற்கு முன்னதாக வகுப்பாசிரியர்களினூடாக அறியத்தரவும். அவர்களுக்கான புலன்மொழித் தேர்வு மீள்தேர்வாக 13.05.2023 பகல் 13:00 முதல் 15:00 வரை தமிழர் வள ஆலோசனை மையத்தில் நடைபெறும்.

03.06.2023 - ஆண்டிறுதி எழுத்துத் தேர்வுகள் இடம்பெறும். அனைத்து மாணவர்களும் ஆசிரியர்களால் பரிந்துரைக்கப்படும் பயிற்சிகளையும் வீட்டுப்பாடங்களையும் கவனம் செலுத்தி செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*மாதிரி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வுகள்*

13.05.2023 - 28.05.2023 வரை ஆசிரியர்கள் அனைத்துலக ஆண்டிறுதித் தேர்வுக்கான மாதிரித் தேர்வு மற்றும் மதிப்பீட்டுத் தேர்வுகளை நடாத்தத் திட்டமிட்டுள்ளனர். எனவே அனைத்து மாணவர்களும் தவறாது வருகை தந்து அனைத்துலக ஆண்டிறுதித் தேர்வுக்கான பயிற்சிகளைப் பெறவேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம். வகுப்பு ஆசிரியர்களினால் நடாத்தப்படும் இத்தேர்வுகளின் புள்ளிகளும் மிகவும் அவசியமானது. அனைத்து மாணவர்களையும் அரையாண்டில் வழங்கப்பட்ட தேர்ச்சி அட்டைகளை விரைவில் ஆசிரியர்களிடம் மீள் வழங்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

## கலை - 13.05.2023 சனிக்கிழமை

வழமைபோல் வழங்கப்பட்ட நேரத்தில் நடைபெறும். மாற்றங்கள் இருப்பின் கலை ஆசிரியர்கள் அறியத்தருவார்கள்.

**சிற்றுண்டிச்சாலை** இயங்குநிலையில் இருக்கும்.

*தாங்கள் பயன்படுத்தும் உணவுப்பொருட்கள் அல்லது தேநீர் அருந்தும் கோப்பைகள் இருப்பின் அவற்றை அப்புறப்படுத்தி சுத்திகரித்துச் செல்லல் வேண்டும்.*

**நிதி 2023** - அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம் லோறன்ஸ்கூக் வளாகத்தின் முழுமை பெற்ற உறுப்பினர் விபரம் வைபர் அறியவேண்டுமாயின் வளாகக் தணக்காளரின் மின்னஞ்சலினூடாகத் தொடர்புகொள்ளவும். jude@annai.no

**கோடைகால ஒன்றுகூடல் 10.06.2023** அன்று இடம்பெறும். அந்த நாளை அனைவரும் ஒதுக்கிவைக்கவும். மாற்றங்கள் இருப்பின் அறியத்தரப்படும். மேலதிக விபரங்கள் பின்பு வழங்கப்படும்.

**விளையாட்டுப்போட்டி 11.06.2023**

மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் அனைத்தும் அவர்களின் பிறந்த ஆண்டு அடிப்படையிலே நடைபெறும்.

*பிறந்த ஆண்டும் அவர்களுக்கான விளையாட்டுகளும்.*

2017ஆம், 2018ஆம மற்றும் 2019ஆம் ஆண்டு பிறந்த மாணவர்களுக்கு விளையாட்டுகள் அனைத்தும் போட்டிகள் இன்றி இடம்பெறும்.

2016ஆம் ஆண்டு பிறந்தவர்கள் முதல் அனைத்து மாணவர்களுக்கும் போட்டிகளாகவே இடம்பெறும்.

*பிறந்த ஆண்டு மற்றும் அதற்குரிய விளையாட்டுகள்*

பற்றிய விபரம் மற்றும் பதிவுப்படிவம் விரைவில் வைபர் குழுமங்களினூடாக அனுப்பிவைக்கப்படும்.

எமது வளாகத்தில் 10ஆம் வகுப்பில் கல்விபயிலும் மாணவர்களான

**அன்யா சுதர்சன்,**

**அபிஷாரா பிரபாகரன்,**

**நெவின் சந்திரநிதி,**

**றித்திக் ஜீவா**

ஆகியோர் விளையாட்டுக்குழுவில் இணைந்து விளையாட்டுப்போட்டிகளை நடாத்துவதற்கு சுயவிருப்பத்துடனும் பெற்றோரின் ஒப்புதலுடனும் முன்வந்துள்ளமை அனைவருக்கும் பெருமையோடு அறியத்தருகின்றோம். இவ்வாரம் இவர்கள் அனைத்து மாணவர்களுக்கும் விளையாடுகள் பற்றிய விளக்கமளித்தல் சந்திப்பினை நடாத்துவார்கள்.

இவ்வாரமும் விளையாட்டுப்போட்டிக் குழுவினர் சந்திப்பு இடம்பெறும்.

**மே 18 - தமிழ் இனவழிப்பு நாள்** - நினைவுகூரல் 20.05.2023 அன்று எமது பாடசாலையில் வழமையான பாடசாலை நேரத்தில் இடம்பெறும்.

**அனைத்துலக அறிவாடல் போட்டி 2023** - நாடுகளுக்கு இடையேயான போட்டி நாள் 21.10.2023. இதற்கான வினாவிடைக் கொத்துகள் விரைவில் வகுப்புகளுக்கு வைபர் குழுமத்தினூடாக அனுப்பிவைக்கப்படும்.
இவ்வாண்டு பல மாணவர்கள் பங்குகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

***எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.***

நன்றி!

நிர்வாகம்
அன்னை லோறன்ஸ்கூக் வளாகம்

தமிழை வளர்க்கப்
பணிபுரிவோம்!